

**மஞ்சள் அறுவடை கருவி**

ஸ்ரீ P. ராம்ராஜ்,
த/பெ.திரு.பொங்கியன்ன கவுண்டர்,
கொத்துகாரர் தோட்டம்,
A.புதுப்பாளையம், கெட்டிசமுத்திரம் அஞ்சல்,
பவானி தாலுகா, ஈரோடு மாவட்டம்
அலைபேசி எண் : (0) 9865171790

| | | |
|---|---|---|
| வயது | : | 48 |
| கல்வி தகுதி | : | SSLC |
| விவசாய நிலம் | : | 5 ஏக்கர் |
| அனுபவம் | : | 33 ஆண்டுகள் |
| சாகுபடி செய்யும் பயிர்கள் | : | மஞ்சள், வாழை மற்றும் காய்கறிகள் |
| கால்நடை | : | மாடுகள் மற்றும் எருமைகள் |
| அங்கீகாரம் | : | • 2010 ம் வருடம் தேசிய அளவிலான பண்ணை கண்டுபிடிப்பாளர் கூட்டத்தில், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தால் இவருக்கு பண்ணைக் கண்டுபிடிப்பாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.<br>• பண்ணை கண்டுபிடிப்புகள் கூட்டம், 2010<br>• விவசாயிகள் குழுவில் உறுப்பினர் |

**கண்டுபிடிப்பின் நடைமுறைப் பயன்பாடு** :

பவர் டில்லர் உதவியுடன் இக்கருவியை எளிதாக இயக்கலாம். இக்கருவி சிறியதாக இருப்பதால் எளிதாக எடுத்துச் செல்லலாம். இக்கருவியின் செயல்பாட்டிற்கு, குறைந்தளவு எரிசக்தி போதுமானது. இந்த கருவியைக் கொண்டு மஞ்சள் வேர்தண்டு அறுவடை செய்தால் பெண்

தொழிலாளர்களின் எண்ணிக்கை குறையும். இந்த கருவியைக் கொண்டு ஒரு ஏக்கர் அறுவடைக்கு ரூ.7500 வரை வேலையாட்கள் செலவை சேமிக்கலாம். இந்த பயன்பாட்டின் வீதம் 1:3.3 ஆகும்.

மஞ்சள் அறுவடை காலத்தில், பொதுவாக வேலையாட்கள் அவர்களின் வழக்கமான வேலையில் ஈடுபட்டிருப்பார்கள் இதனால் திறமையற்ற வேலையாட்களை கொண்டு மஞ்சள் கிழங்கு அறுவடை செய்யும் போது கிழங்கு மகசூல் வீணாகும். ஆனால், இந்த அறுவடைக் கருவியை பயன்படுத்தி அறுவடை செய்யும் கிழங்கு வீணாவதும், மகசூல் இழப்பு ஏற்படுவதும் தவிர்க்கப்படுகிறது. இக்கருவியின் தற்போதைய மேம்பாட்டில், மலைப்பாங்கான பகுதிகளில் உருளைக் கிழங்கு அறுவடையும் செய்யப்படுகிறது.





மஞ்சள் அறுவடைக் கருவி

**ஆதாரம்:**

பேராசிரியர் மற்றும் தலைவர்

MYRADA வேளாண் அறிவியல் நிலையம்,

272, பெருமாள்நகர், புதுவள்ளியம்பாளையம்,

கோபிசெட்டிப்பாளையம், ஈரோடுமாவட்டம்.

தொலைபேசி எண்: 04285 -241626, 241727